# இந்தியா பௌண்டேசன் பார் தி ஆர்ட்ஸ் (ஐ.எ.ஃ.ப்.ஏ)

## தன் கலைப் பயில்வுத் திட்டத்தின் கீழ்

**கலைத்தளங்களுக்கான (Arts Platforms) விண்ணப்பங்களை வரவேற்கிறது**

**விண்ணப்பங்கள் வருடமுழுதும் வரவேற்கப்படுகின்றன.**

கலைப் பயில்வுத் திட்டம் (Art Practice Programme) கலைஞர்கள் தங்களின் தற்போதைய பயில்வுகளின் வீச்சுக்களை, பரப்பெல்லைகளைப் புதிய நோக்கில் விரிவுபடுத்த உதவும் வேலைத்திட்டங்களைச் (projects) செயற்படுத்த முற்படுகின்றது. இவ்வேலைத்திட்டங்கள் மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளைக் கேள்விக்குட்படுத்துவதாகவோ, வடிவம், உள்ளடக்கம், ஊடகம் போன்றவற்றில் புதிய எல்லைகளை நகர்த்தக்கூடியதாகவோ, வெளி, பார்வையாளர்கள், சமூகங்கள் ஆகியவற்றின்மீதுகொண்ட ஈடுபாடுகளில் புதிய அணுகுமுறைகளைக் கண்டறியக்கூடியதாகவோ, சோதனை முயற்சிகளை வெளிப்படுத்தக்கூடியதாகவோ அமையலாம்.

**கலைத்தளங்கள் (Arts Platforms):**

கலைஞர்கள், சில வேளைகளில், கலைச்செயல்பாடு குறித்த தங்களின் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளவும், புதிய வெளிப்பாட்டுமுறைகளை வளர்த்தெடுக்கவும் அல்லது தங்களின் கலைச்செயற்பாடுகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கான கூட்டிணைப்புக்களை (networks) உருவாக்கவும் பிற கலைஞர்களுடன் ஒன்றுசேரவேண்டிய தேவையினை உணரக்கூடும். ஒன்றுசேர்வதற்கான இவ்விருப்பம் கலைஞர்கள் தங்களின் சொந்தக் கலைத்தளத்திற்கு அப்பால் கலை பற்றிய புதிய எண்ணங்களைத் தேடுகின்றபோதோ, நீண்ட காலமாகத் தனியாகக் கலைச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருவதினால் (அதிலிருந்து தற்காலிகமாக அல்லது நிலையாக ஒரு) விடுப்பு எடுக்க வேண்டிய தேவையினாலோ அல்லது குறிப்பிட்ட சமூக அரசியல் சூழலுக்குக் கலைச்செயல்பாட்டின்மூலம் எதிர்வினையாற்ற வேண்டிய உடனடித்தேவையினாலோ ஏற்படலாம்.

கலைப்பயில்வுத் திட்டத்தின் கீழ், இத்தகைய **கலைத்தளங்களுக்கான** வேலைத்திட்ட முன்வரைவுகளை (proposals) வரவேற்கின்றோம். அவை, பின்வரும் நோக்கங்களைக் கொண்டதாக அமையலாம். அதாவது, கலைஞர்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்த்தெடுத்தல், அவர்களின் படைப்பாக்கத்தன்மையை மேம்படுத்துதல், அவர்களுடைய கலைச்செயற்பாடுகளை நீடித்து நிலைக்கச் செய்தல் முதலிய நோக்கங்களுடன், ஒரு செயற்பாட்டில் அல்லது பல செயற்பாடுகளின் ஊடாக இயங்கும் கலைஞர்களை ஒரு தளத்தில் ஒருங்கிணைக்க ஏதுவான இடம் சார்ந்த அல்லது வேறு வடிவிலான வெளிகளையும் இணைப்புத்தளங்களையும் வளர்த்தெடுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

**திட்டத்தின் கால அளவு:** 12 மாதங்கள் வரை

**வரவு செலவுத் திட்ட அளவு**: அதிகப்பட்டியாக ரூபாய் 3,00,000 வரை (மொத்த வரவுசெலவுத் தொகையில் 30% -க்கு மிகாமல் மதிப்பீட்டுத் தொகை (honorarium) கோரலாம்).

**விண்ணப்பிப்பதற்கான காலம்:** திட்ட முன்வரைவுகளை வருடத்தில் எப்போது வேண்டுமானாலும் அனுப்பலாம்.

**யார் யாரெல்லாம் விண்ணப்பங்களை அனுப்பலாம்?**

ஒரு கலைப்புலம் சார்ந்தோ அல்லது பல்வேறு புலங்களின் ஊடாகவோ இயங்குகின்ற கலைஞர்களிடமிருந்து இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

- இசை, ஒலி, பனுவல், நடனம், உடலியக்கம், அரங்கம், பாவைக்கூத்து, கதைசொல்லல், மாயவித்தை (magic), சர்க்கஸ் (circus), இன்னும் பிற நிகழ்த்துக்கலைகள் சார்ந்த நிகழ்த்துக்கலைஞர்கள்.
- திரைப்படம் (ஆவணப்படம் மற்றும் புனைவுப்படம்), சலனச் சித்திரம் (animation), புகைப்படம், நிறுவல் கலை (installation), புது ஊடகக் கலை (new media), செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், ஊடாட்டக்கலைகள், மின் ஊடக விளையாட்டு (gaming), ஓவியம், சிற்பம், அச்சுக் கோர்த்தல், சித்திரப் புத்தகம், வரைகலைக் கதையாடல்கள், கலைஞர் புத்தகம் இன்னும் பிற காண்பியக் கலை வடிவங்கள் சார்ந்து இயங்கும் காண்பியக் கலைஞர்கள்.
- கலைக்காட்சிக் கூடங்களுக்கு வெளியே இயங்கும் எடுத்தாளுனர்கள் (curators)
- இலக்கியப்படைப்புகளுடன் இயங்கும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள்
- பல்துறைப் படைப்பாக்கங்களில் ஈடுபட்டுள்ள கலைச்செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள்

**தகுதி:**

இந்தியக் குடிமக்கள் அனைவரும் திட்ட முன்வரைவுகளை அனுப்பத் தகுதியுடையவர்கள். விண்ணப்பிப்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடன் சேர்ந்து இத்திட்டங்களில் உடனியங்க இருக்கும் பிற பங்கேற்பாளர்களும் இந்தியக் குடிமக்களாகவே இருக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு, இங்கே சொடுக்கவும்.

**திட்ட முன்வரைவுகளைச் சமர்ப்பித்தல்:**

ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழிகளிலும் உங்களின் திட்ட முன்வரைவுகளை எழுதலாம். ஆங்கிலத்தை விட, பிற இந்திய மொழிகளில் திட்ட முன்வரைவுகளை எழுத ஐ.எ.ஃ.ப்.ஏ ஊக்கப்படுத்துகினறது.

- உங்களின் திட்ட முன்வரைவுகளில்
    - ஒரு கலைஞராக உங்களின் தற்போதைய கலைப்பயில்வு, அக்கறை, விருப்பங்கள்
    - நீங்கள் ஒருங்கிணைக்கவிருக்கின்ற கலைத்தளம் குறித்த விபரங்கள், இக்கலைத்தளத்தினை நீங்கள் ஒருங்கிணைக்க விரும்புவதற்கான காரணம், உங்களுடன் சேர்ந்து செயலாற்ற இருக்கின்ற பிற செயற்பாட்டாளர்கள், இந்த ஒருங்கிணைப்பு (அல்லது கூட்டிணைவு) ஒழுங்கமைக்கப்பட இருக்கின்ற இடம் / வெளி
    - விரிவான வரவுசெலவுத் திட்ட அறிக்கை, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காலவரிசை விபரங்கள்
    - இவ்விண்ணப்பத்திற்குத் தேவையான உங்களின் முந்தைய படைப்புச் சான்றுகள்
    - உங்களின் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி

ஆகியனவற்றை விளக்கி அனுப்புங்கள்.

திட்ட முன்வரைவுகள் குறித்த உங்களின் கேள்விகளையும் எண்ண ஓட்டங்களையும் எங்களுடன் விவாதிக்க அவற்றை எழுத்து வடிவிலோ, ஒலி அல்லது காட்சி வடிவிலோ அனுப்பி வைக்கவும். இறுதி (அல்லது முழுமையான) திட்ட முன்வரைவுகள் எழுத்து வடிவத்தில் தான் அளிக்கப்பட வேண்டும்.

உங்களின் இறுதித் திட்ட முன்வரைவுகளை இணைய வழியாக, கலைப்பயில்வுத் திட்டத்தின் தலைமையான சுமனா சந்திரசேகருக்கு sumana@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில் அனுப்பி வைக்கலாம். உங்களின் திட்ட முன் வரைவுகள் தொடர்பான ஏதேனும் கேள்விகள், விளக்கங்கள் இருப்பின், தயவுசெய்து sumana@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துச் செயல்திட்டங்களும் ஐ.எ.ஃ.ப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்.

குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய வகையிலான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எ.ஃ.ப்.ஏ. உறுதிபூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில்

கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

கலை ஆய்வுத் திட்டம் சோனி பிக்சர்ஸ் எண்டர்டெயின்மெண்ட் பண்ட் (Sony Pictures Entertainment Fund) நிறுவனத்தின் நிதிநல்கையினால் சாத்தியமானது.